சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.33/2019

13.03.2025

வா.சா.1 திரு. இராஜேந்திரன், த/பெ. வீரப்பன்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் எனக்கு குடும்ப நண்பர் ஆவார். பிரதிவாதியின் கணவரை தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிக்கு பணம் கொடுத்தது சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் கட்டிட காண்டிராக்ட் வேலை செய்துவருகிறேன். பிரதிவாதி என்னிடம் 10 நாட்களாக ரூ.6,00,000/- பணம் வேண்டும் என கேட்டு கொண்டிருந்தார் அவர் கேட்ட 1 வாரத்தில் ரூ.6,00,000/- கடனாக கொடுத்தேன். எனது நண்பரிடமிருந்து பணம் வாங்கி கொடுத்தேன். எனது நண்பரும் காண்டிராக்ட் வேலை செய்துவருகிறார். பிரதிவாதிக்கு பணம் வட்டிக்கு கொடுக்கவில்லை கைமாத்தாக கொடுத்தேன். பிரதிவாதி கடன் வாங்கி கொண்டு கைலெட்டர் ஒன்றை கொடுத்தார். அந்த கைலெட்டரை பிரதிவாதி என்னிடம் 26.11.2018 ல் திரும்ப வாங்கி கொண்டு இந்தியன் வங்கி காசோலை ஒன்றை கொடுத்தார். பிரதிவாதிக்கு பணம் கொடுத்த விவரம் அவரின் கணவருக்கு தெரியுமா என்றால் அவர் வெளிநாட்டில் உள்ளதால் அவருக்கு தெரியாது. பிரதிவாதி 3 சீட்டு கம்பெனி நடத்தினார் தற்போது கடை வைத்துள்ளார். பிரதிவாதி கடன் பெறும்போது வீட்டு பத்திரம் ஏதாவது கொடுத்தாரா என்றால் இல்லை. பிரதிவாதி என் பெயரில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். பணம் சம்பந்தமாக புகார் கொடுக்கவில்லை. 04.01.2018 முதல் 26.11.2018 வரை பிரதிவாதி பணம் ஏதும் திரும்ப கொடுக்கவில்லையா என்றால் பலமுறை கேட்டேன் திரும்ப கொடுக்கவில்லை. பிரதிவாதியை அடிக்கடி பணம் கேட்டு மிரட்டினேன் என்றால் இல்லை. பிரதிவாதியை மிரட்டியது சம்பந்தமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

**பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.